# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை :திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்: 211/மா/2025
நாள்: 29.04.2026

M. கிருஷ்ணபாண்டி,
மதுரை. --- முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
மதுரை மாநகராட்சி. --- எதிர்மனுதாரர்

மதுரை–625 016, மேலப்பொன்னகரம், 12வது தெரு, கதவு எண் 10 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M. கிருஷ்ணபாண்டி என்பவரின் 26.05.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.05.2025 அன்று பெறப்பட்டு 211/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

மதுரை–625 016, மேலப்பொன்னகரம், 12வது தெரு, கதவு எண் 10 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M. கிருஷ்ணபாண்டி என்பவர் தனது 26.05.2025 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

"தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவராகிய தாங்களிடம் இந்த குற்றச்சாட்டினை எழுத்து பூர்வமாகவும், மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களை சாட்சியாகவும், 2014–ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் விதி–4–ன் படி பதிவு அஞ்சல் மூலம் மேல்முறையீட்டு மனுவாக தாக்கல் செய்கிறேன்.

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட மாட்டுத்தாவணி காய்கறி மார்ச்கெட்டில் 540 கட்டிட கடைகளுக்கு 01.08.2016 அன்று தமிழக அரசாணை எண் 92, நாள் 03.07.2007– ன்படி குத்தகை வாடகை மறுமதிப்பீடு முன் அறிவிப்பின்றி செய்யப்பட்டதால், குத்தகைதாரர்கள் நீதிமன்றம் சென்று வாடகை செலுத்த தடை ஏற்பட்டு மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டு மாநகராட்சிக்கு நிதிச் சுமை ஏற்பட்டது.

மேலும் இந்த 540 கட்டிட கடைகளின் உரிமைதாரர்கள் கடைகளை உள்வாடகைக்கு விட்டு தினசரி ரூ 1000 முதல் 2000–ம் வரை வசூல் செய்து வருகிறார்கள். இதனால், மாநகராட்சிக்கு பல கோடி வருவாய் இழப்பு எற்படுகிறது. விதிமீறல்கள் சம்பந்தமாக மாநகராட்சிக்கு சங்கத்தின் சார்பில் பல முறை மனு அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஆகவே இந்த 540 கட்டிட கடைகளின் குத்தகைதாரர்களுக்கு 03.07.2025 அன்றுடன் 9 ஆண்டு குத்தகை கால அளவு முடிவுற்ற நிலையில், மீண்டும் குத்தகை கால அளவை நீட்டித்துக் கொள்ள முன்னுரிமை அளிக்க கூடாது. அவ்வாறு முன்னுரிமை அளித்தால் மேலும் விதி மீறல்கள் அதிகரிக்கும் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படும்.

ஆகவே, அரசாணையின்படி 540 கட்டிட கடைகளுக்கும் குத்தகை வாடகை மறு மதிப்பீடு செய்து, மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவு W.P (MD) No.2369/2018-ன்படி பொது ஏலத்தில் 540 கட்டிட கடைகளை ஒதுக்கீடு செய்ய உத்தரவு வழங்க வேண்டியும், இதனால் மாநகராட்சிக்கு பல மடங்கு வருவாய் அதிகரிக்கும் உண்மையான வியாபாரிகள் பயன் பெறுவார்கள்.

மேற்படி சமூகம் தாங்கள் எனது மேல்முறையீட்டு மனுவை விரைந்து பரிசீலித்து நீதி வழங்க வேண்டுமாய் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.''.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 20.06.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் மதுரை மாநகராட்சி, ஆணையாளரிடம் கோரப்பட்டது. ஆனால் அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. எனினும், இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 09.04.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 20.03.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இந்நிலையில், மனுதாரர் தனது 08.04.2026 நாளிட்ட கடிதத்தில் குடும்ப சூழ்நிலை காரணமாக 09.04.2026 அன்று நேரில் விசாரணைக்கு ஆஜராக இயலாததால் தன்னுடைய தன்னிலை விளக்க மனுவினை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்:–

''வழக்கு எண் 211/மா/2025–1 நாள் 20.03.2026 – விசாரணை அறிவிப்பு கிடைக்கப் பெற்றேன்.

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட மாட்டுத்தாவணி காய்கறி மார்க்கெட்டில் விதிமீறல்கள். இதனால் மாநகராட்சிக்கு பல கோடி ரூபாய் வருவாய் இழப்பு அரசாணை எண் 92 நாள் 03.07.2007–ன்படி அனைத்து கடைகளையும் பொது ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை வேண்டி சங்கத்தின் சார்பாக (06.05.2019, 21.11.2019, 26.08.2020, 06.10.2021, 06.06.2022, 17.04.2023, 02.05.2025) பல ஆண்டுகளாக புகார் மனு அளித்தும் மாநகராட்சி உதவி ஆணையாளர் (வருவாய்) அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஆகையால் நடவடிக்கை வேண்டி மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண் W.P. (MD) No.32237 of 2025 dt 13.11.2025 அன்று எனது மனுவின் கோரிக்கை நிறைவேற்றும் பொருட்டு தீர்ப்பாணை வழங்கப்பட்டது. ஆனால் மாநகராட்சி உதவி ஆணையர் (வருவாய்) அவர்கள் அரசாணையை செயல்படுத்தாமல் விதிகளை மீறி விதி மீறல்களில் ஈடுபடுபவர்களுக்கு ஆதரவாக செயல்பட்டு மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தியுள்ளார். மேலும் நீதிமன்ற தீர்ப்பாணையின்படி அரசாணையை செயல்படுத்தாதது சட்ட விரோதமாகும். நீண்ட நாட்களாக விதிமுறை மீறி இயங்கி வரும் அனைத்து கடைகள் மற்றும் 540 கடைகளை முறையாக பொது ஏலம் விட்டு வரும் வருவாயினை இழக்க செய்திடும் உதவி ஆணையர் (வருவாய்) மற்றும் அதனை தொடர்ந்து உள்ள அனைத்து மதுரை மாநகராட்சி ஊழியர்கள் மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ விதிகள் எண் 11(1) மற்றும் 11(2) ஆகியவற்றின் மூலம் உரிய புலனாய்வு பிரிவுக்கு மாற்றி விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கவும், பிரிவு 12 (1) (a)–ன்படி மதுரை மாநகராட்சிக்கு நஷ்டம் ஏற்படுத்தி இழப்பை உண்டாக்கியவர்களிடம் இருந்து அந்த இழப்புக்கு உரிய தொகையை வசூலிக்க உத்திரவிட வேண்டியும், தாங்களிடம் இந்த தன்னிலை விளக்க மனுவினை

சமர்ப்பிக்கிறேன். எனது இந்த மனுவின் கோரிக்கையை சட்டப்படி ஏற்றுக் கொண்டு மாண்புமிகு நடுவம் முறையீட்டு வழக்கு எண் 211/மா/2025–1–க்கு உத்திரவிட தங்களை கேட்டுக் கொள்கிறேன்.''

5. எதிர்மனுதாரரான மதுரை மாநகராட்சி ஆணையாளர் தனது கடிதம் எண் எ3/005571/2025 நாள் 08.04.2026–ல் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். அதில்–

''மதுரை மாநகராட்சியின் மண்டலம்–2 வார்டு எண் 33 மாட்டுத்தாவணி மைய காய்கறி அங்காடி வளாகத்தில் அமைந்துள்ள கட்டிட கடைகளுக்கு குத்தகை மற்றும் வாடகை நிர்ணயம் அரசாணை எண் 92–ன்படியும், பொதுஏலத்தில் கடைகளை ஒதுக்கீடு செய்யவும் குத்தகை கால அளவை நீட்டித்து கொள்ள முன்னுரிமை அளிக்க கூடாது என 02.05.2025 நாளிட்ட மனுவில் திரு. M. கிருஷ்ணபாண்டி என்பவர் ஆட்சேபனை தெரிவித்துள்ளார்.

மேலும், அதனை தொடர்ந்து மேற்காணும் ஆட்சேபனை மனுவின் மீது நடவடிக்கை மேற்கொள்ள கோரி மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திடம் திரு. M. கிருஷ்ணபாண்டி என்பவர் முறையீடு செய்துள்ளார்.

24.7.2025 நாளிட்ட மதுரை மாநகராட்சி ஆணையாளரின் கடிதத்தில் மனுதாரரை 29.7.2025 அன்று நேரில் ஆஜராக கோரி விளக்கம் சமர்ப்பிக்க அழைப்பாணை அனுப்பப்பட்டது.

இந்நிலையில், மேற்படி அழைப்பாணையின் பேரில் கடந்த 29.07.2025ம் தேதியன்று மதுரை மாநகராட்சி துணை ஆணையாளர் அவர்களின் முன்னிலையில் விசாரணைக்கு நேரில் ஆஜராகி திரு. M. கிருஷ்ணபாண்டி என்பவர் சமர்ப்பித்துள்ள விளக்கத்தில் மண்டலம்–2, வார்டு எண் 33, மாட்டுத்தாவணி மைய காய்கறி அங்காடி வளாகத்தில் அமைந்துள்ள கட்டிட கடைகளுக்கு அரசாணை எண் 92–ன்படி, குத்தகை மற்றும் வாடகை நிர்ணயம் செய்யவும், பொது ஏலத்தில் கடைகளை ஒதுக்கீடு செய்யவும், குத்தகை கால அளவை நீட்டித்து கொள்ள முன்னுரிமை அளிக்க கூடாது எனவும், தெரிவித்து விளக்க கடிதம் அளித்துள்ளார். எனினும், உள்வாடகை குறித்த புகார் தொடர்பாக ஆதார ஆவணங்கள் எதுவும் விசாரணையில் சமர்ப்பிக்கவில்லை.

மேலும், இப்பொருள் தொடர்பாக மனுதாரரால் தொடரப்பட்ட மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை வழக்கு எண் W.P. (MD) No.32237 of 2025 தீர்ப்பாணை நாள் 13.11.2025–ல் பின்வருமாறு ஆணையிடப்பட்டிருந்தது.

"In view of the limited prayer sought for by the petitioner, this Court, without expressing any opinion on the merits of the matter, directs the third respondent to consider the petitioner's representation dated 02.05.2025 and pass final orders on its own merits, within a period of three months from the date of receipt of a copy of this order, after issuing notice to the petitioner as well as other interested parties."

மேற்காணும் மாண்பமை உயர்நீதிமன்றம் மதுரை கிளையின் தீர்ப்பாணையினை நிறைவேற்றும் பொருட்டு, மனுதாரரின் 02.05.2025ம் தேதிய மனுவின் பேரில் விளக்கம் அளிக்க ஏதுவாக மனுதாரருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு அளித்து, 30.01.2026 நாளிட்ட மதுரை மாநகராட்சி அலுவலக அழைப்பாணையின்படி மனுதாரர் திரு. M. கிருஷ்ணபாண்டி என்பவரை நேரில் ஆஜராக கோரப்பட்டது.

அதனை தொடர்ந்து கடந்த 05.02.2026ல் மதுரை மாநகராட்சி துணை ஆய்வாளர் அவர்களின் முன்னிலையில் நேரில் ஆஜரான திரு. M. கிருஷ்ணபாண்டி என்பவர் மதுரை மாநகராட்சி மண்டலம்–2 வார்டு எண் 33 மாட்டுத்தாவணி மைய காய்கறி அங்காடி

வளாகத்தில் அமைந்துள்ள கட்டிட கடைகளுக்கு அரசாணை எண் 92–ன்படி குத்தகை மற்றும் வாடகை நிர்ணயம் பொதுஏலத்தில் கடைகளை ஒதுக்கீடு செய்யவும் குத்தகை கால அளவை நீட்டித்து கொள்ள முன்னுரிமை அளிக்க கூடாது எனவும், தெரிவித்து விளக்க கடிதம் அளித்துள்ளார். எனினும், உள்வாடகை குறித்த புகார் தொடர்பாக ஆதார ஆவணங்கள் எதுவும் விசாரணையில் சமர்ப்பிக்கவில்லை.

அதனை தொடர்ந்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை தீர்ப்பாணையில் ஆணையிட்டுள்ளவாறு, திரு. M. கிருஷ்ணபாண்டி என்பவரின் 02.05.2025ம் தேதிய மனு, மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்த 26.05.2025ம் தேதிய முறையீடு மற்றும் மனுதாரர் நேரில் ஆஜராகி சமர்ப்பித்த விளக்கங்கள் ஆகியவை மிகுந்த கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

அதன்பேரில் தமிழ்நாடு அரசிதழ் வெளியீடு எண் 836, அரசாணை எண்.480 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 16.12.2025–ன்படி 9 ஆண்டுகள் குத்தகை இனங்களுக்கான கால வரம்பு 12 ஆண்டுகளாக நீட்டிப்பு செய்து அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி அரசாணையின்படி மதுரை மாநகராட்சி மண்டலம்–2 வார்டு எண் 33 மாட்டுத்தாவணி மைய காய்கறி அங்காடி வளாகத்தில் அமைந்துள்ள கட்டிட கடைகளுக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேலும், மனுதாரர் தெரிவித்துள்ள புகார் தொடர்பாக உரிய ஆவணங்களை இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கும்பட்சத்தில் மாநகராட்சியின் சட்டவிதிகளுக்கு உட்பட்டு உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விபரத்தினை தெரிவித்தும் 09.02.2026 நாளிட்ட இவ்வலுவலக கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்ற விவரம் இதன் மூலம் பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது.''

6. எதிர்மனுதாரர் தரப்பில் மதுரை மாநகராட்சி உதவி ஆணையாளர் (வருவாய்) (பொறுப்பு) 09.04.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''மனுதாரர் தனது புகார் தொடர்பாக கடந்த 29.07.2025ம் தேதியன்று மதுரை மாநகராட்சி துணை ஆணையாளர் அவர்களின் முன்னிலையில் விசாரணைக்கு நேரில் ஆஜராகி மாட்டுத்தாவணி மைய காய்கறி அங்காடி வளாகத்தில் அமைந்துள்ள கட்டிட கடைகளுக்கு அரசாணை எண் 92–ன்படி, குத்தகை மற்றும் வாடகை நிர்ணயம் செய்யவும், பொது ஏலத்தில் கடைகளை ஒதுக்கீடு செய்யவும், குத்தகை கால அளவை நீட்டித்து கொள்ள முன்னுரிமை அளிக்க கூடாது எனவும், தெரிவித்து விளக்க கடிதம் அளித்துள்ளார். எனினும், உள்வாடகை குறித்த புகார் தொடர்பாக ஆதார ஆவணங்கள் எதுவும் விசாரணையில் சமர்ப்பிக்கவில்லை.

மேலும், இப்பொருள் தொடர்பாக மனுதாரரால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை வழக்கு எண் W.P. (MD) No.32237 of 2025 தீர்ப்பாணை நாள் 13.11.2025–ல் பின்வருமாறு ஆணையிடப்பட்டிருந்தது.

" In view of the limited prayer sought for by the petitioner, this Court, without expressing any opinion on the merits of the matter, directs the third respondent to consider the petitioner's representation dated 02.05.2025 and pass final orders on its own merits, within a period of three months from the date of receipt of a copy of this order, after issuing notice to the petitioner as well as other interested parties."

மேற்காணும் மாண்பமை உயர்நீதிமன்றம் மதுரை கிளையின் தீர்ப்பாணையினை நிறைவேற்றும் பொருட்டு மனுதாரரின் 02.05.2025 தேதிய மனுவின் பேரில் விளக்கம் அளிக்க ஏதுவாக மனுதாரருக்கும் மீண்டும் ஒரு வாய்ப்பு அளித்து மதுரை மாநகராட்சி

அலுவலக அழைப்பாணையின்படி மனுதாரர் திரு.M.கிருஷ்ணபாண்டி என்பவரை நேரில் ஆஜராக கோரப்பட்டது.

அதனை தொடர்ந்து கடந்த 05.02.2026–ல் மதுரை மாநகராட்சி துணை ஆணையாளர் அவர்களின் முன்னிலையில் நேரில் ஆஜரான திரு. M. கிருஷ்ணபாண்டி என்பவர் மதுரை மாநகராட்சி, மண்டலம்–2, வார்டு எண் 33, மாட்டுத்தாவணி மைய காய்கறி அங்காடி வளாகத்தில் அமைந்துள்ள கட்டிட கடைகளுக்கு அரசாணை எண் 92–ன்படி குத்தகை மற்றும் வாடகை நிர்ணயம் பொது ஏலத்தில் கடைகளை ஒதுக்கீடு செய்யவும் குத்தகை கால அளவை நீட்டித்து கொள்ள முன்னுரிமை அளிக்கக்கூடாது எனவும், தெரிவித்து விளக்க கடிதம் அளித்துள்ளார். எனினும், உள்வாடகை குறித்த புகார் தொடர்பாக ஆதார ஆவணங்கள் எதுவும் விசாரணையில் சமர்ப்பிக்கவில்லை.

அதனை தொடர்ந்து மாண்பமை உயர்நீதிமன்றம் மதுரை கிளை தீர்ப்பாணையில் ஆணையிட்டுள்ளவாறு திரு. M. கிருஷ்ணபாண்டி என்பவரின் 02.05.2025ம் தேதிய மனு, மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்த 26.05.2025ம் தேதிய முறையீடு மற்றும் மனுதாரர் நேரில் ஆஜராகி சமர்ப்பித்த விளக்கங்கள் ஆகியவை மிகுந்த கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, தமிழ்நாடு அரசிதழ் வெளியீடு எண் 836 மற்றும் அரசாணை எண் 480 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 16.12.2025ன்படி 9 ஆண்டுகள் குத்தகை இனங்களுக்கான கால வரம்பு 12 ஆண்டுகளாக நீட்டிப்பு செய்து அரசாணை பிறப்பிக்கப்பட்டது தொடர்ச்சியாக, மதுரை மாநகராட்சி மண்டலம்–2, வார்டு எண் 33 மாட்டுத்தாவணி மைய காய்கறி அங்காடி வளாகத்தில் அமைந்துள்ள கட்டிட கடைகளுக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மனுதாரர் தெரிவித்த உள் வாடகை தொடர்பாக கண்காணிக்க மாநகராட்சி சந்தை கண்காணிப்பாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தற்போது நடைபெற உள்ள 2026–ம் ஆண்டு சட்ட மன்ற தேர்தலுக்கு பின்னர் உள் வாடகை குறித்து தொடர் கண்காணிப்பு மேற்கொண்டு மாநகராட்சி சட்ட விதிகளின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும், மனுதாரர் தெரிவித்துள்ள புகார் தொடர்பாக உரிய ஆவணங்களை இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கும்பட்சத்தில் மாநகராட்சியின் சட்டவிதிகளுக்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விவரம் இம்முறைமன்ற நடுவம் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.''

7. முறையீட்டு மனுதாரரின் மனு, தன்னிலை விளக்கக் கடிதம், எதிர்மனுதாரரான மதுரை மாநகராட்சி, ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவி ஆணையாளரின் (வருவாய்) (பொறுப்பு) வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட மாட்டுத்தாவணியில் உள்ள காய்கறி மார்க்கெட்டில் இருக்கும் 540 கட்டிட கடைகளை 01.08.2016 அன்று குத்தகை விடப்பட்டு, 9 ஆண்டு கால குத்தகை அளவு முடிவுற்ற நிலையில், தமிழ்நாடு அரசு அரசாணை எண் 92, நாள் 03.07.2007– ன்படி குத்தகை வாடகை மறுமதிப்பீடு செய்வதற்கு முன் அறிவிப்பின்றி குத்தகையினை நீட்டிப்பு செய்யப்பட்டதால், மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டு மாநகராட்சிக்கு நிதிச் சுமை ஏற்படும் என்பதும், இந்த 540 கட்டிட கடைகளின் உரிமைதாரர்கள் கடைகளை உள்வாடகைக்கு விட்டு தினசரி ரூ 1000 முதல் 2000–ம் வரை வசூல் செய்து வருவதால், மாநகராட்சிக்கு பல கோடி வருவாய் இழப்பு எற்படுகிறது என்பதும், விதிமீறல்கள் சம்பந்தமாக மாநகராட்சிக்கு சங்கத்தின் சார்பில் பல முறை மனு அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்காததால், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண் W.P. (MD) No.32237 of 2025–ன் மீது 13.11.2025 அன்று

வழங்கப்பட்ட தீர்ப்பாணையில் தெரிவித்ததுபடி, அரசாணை எண் 92, நாள் 03.07.2007– ன்படி பொது ஏலத்தில் 540 கட்டிட கடைகளை ஒதுக்கீடு செய்ய உத்தரவு வழங்க வேண்டியும், மேற்கண்ட நீதிமன்ற தீர்ப்பாணையின்படி பொது ஏலம் விடாமல் விதி மீறி இயங்கி வரும் அனைத்து கடைகளினால் மாநகராட்சிக்கு வரும் வருவாய் இழப்பினை ஏற்படுத்திய அனைத்து மதுரை மாநகராட்சி அலுவலர்கள் மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ சட்டம், பிரிவு 11(1) மற்றும் 11(2) ஆகியவற்றின் மூலம் உரிய புலனாய்வு பிரிவுக்கு மாற்றி விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கவும், பிரிவு 12 (1) (a)–ன்படி மதுரை மாநகராட்சிக்கு இழப்பை ஏற்படுத்தியவர்களிடமிருந்து உரிய இழப்பீட்டு தொகையை வசூலிக்க உத்திரவிடுமாறும் கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் மனுதாரரின் தன்னிலை விளக்க மனுவின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் புகார் தொடர்பாக கடந்த 29.07.2025ம் தேதியன்று மதுரை மாநகராட்சி துணை ஆணையாளரின் முன்னிலையில் விசாரணைக்கு நேரில் ஆஜராகி மாட்டுத்தாவணி மைய காய்கறி அங்காடி வளாகத்தில் அமைந்துள்ள கட்டிட கடைகளுக்கு அரசாணை எண் 92–ன்படி, குத்தகை மற்றும் வாடகை நிர்ணயம் செய்யவும், பொது ஏலத்தில் கடைகளை ஒதுக்கீடு செய்யவும், குத்தகை கால அளவை நீட்டித்து கொள்ள முன்னுரிமை அளிக்க கூடாது என தெரிவித்து விளக்க கடிதம் அளித்துள்ளார் என்பதும், அக்கடைகளை உள்வாடகை குறித்த புகார் தொடர்பாக ஆதார ஆவணங்கள் எதுவும் விசாரணையில் மனுதாரரால் சமர்ப்பிக்கவில்லை என்பதும், இப்பொருள் தொடர்பாக மனுதாரரால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை வழக்கு எண். W.P.(MD)No.32237 of 2025 தீர்ப்பாணை நாள் 13.11.2025–ன் தீர்ப்பாணையினை நிறைவேற்றும் பொருட்டு மனுதாரரின் 02.05.2025 தேதிய மனுவின் பேரில் விளக்கம் அளிக்க மனுதாரரை நேரில் ஆஜராக கோரப்பட்டதை தொடர்ந்து கடந்த 05.02.2026–ல் மதுரை மாநகராட்சி துணை ஆணையாளரின் முன்னிலையில் நேரில் ஆஜரான மனுதாரர் மதுரை மாநகராட்சி மண்டலம்–2, வார்டு எண் 33, மாட்டுத்தாவணி மைய காய்கறி அங்காடி வளாகத்தில் அமைந்துள்ள கட்டிட கடைகளுக்கு அரசாணை எண் 92–ன்படி குத்தகை மற்றும் வாடகை நிர்ணயம் பொது ஏலத்தில் கடைகளை ஒதுக்கீடு செய்யவும் குத்தகை கால அளவை நீட்டித்து கொள்ள முன்னுரிமை அளிக்கக்கூடாது எனவும், தெரிவித்து விளக்க கடிதம் அளிக்கப்பட்டது என்பதும், உள்வாடகை குறித்த புகார் தொடர்பாக ஆதார ஆவணங்கள் எதுவும் விசாரணையில் சமர்ப்பிக்கவில்லை என்பதும், அதனை தொடர்ந்து மாண்பமை உயர்நீதிமன்றம் மதுரை கிளை தீர்ப்பாணை மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்த 26.05.2025ம் தேதிய முறையீடு மற்றும் மனுதாரர் நேரில் ஆஜராகி சமர்ப்பித்த விளக்கங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டு, தமிழ்நாடு அரசிதழ் வெளியீடு எண் 836 மற்றும் அரசாணை எண் 480 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 16.12.2025ன்படி 9 ஆண்டுகள் குத்தகை இனங்களுக்கான கால வரம்பு 12 ஆண்டுகளாக நீட்டிப்பு வழங்கப்பட்டது என்பதும், அதன் தொடர்ச்சியாக, மதுரை மாநகராட்சி மண்டலம்–2, வார்டு எண் 33 மாட்டுத்தாவணி மைய காய்கறி அங்காடி வளாகத்தில் அமைந்துள்ள கட்டிட கடைகளுக்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்பதும், மனுதாரர் தெரிவித்த உள் வாடகை தொடர்பாக கண்காணிக்க மாநகராட்சி சந்தை கண்காணிப்பாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதும், தற்போது நடைபெற உள்ள 2026ம் ஆண்டு சட்ட மன்ற தேர்தலுக்கு பின்னர் உள் வாடகை குறித்து தொடர் கண்காணிப்பு மேற்கொண்டு மாநகராட்சி சட்ட விதிகளின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும், மனுதாரர் தெரிவித்துள்ள புகார் தொடர்பாக உரிய ஆவணங்களை இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கும்பட்சத்தில் மாநகராட்சியின் சட்டவிதிகளுக்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும், மதுரை மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவி ஆணையாளரின் (வருவாய்) (பொறுப்பு) வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள மதுரை மாநகராட்சிக்குட்பட்ட மாட்டுத்தாவணி மைய காய்கறி அங்காடி வளாகத்தில் உள்ள 540 கட்டிட கடைகள் ஒதுக்கீடு தொடர்பாக, மனுதாரர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மதுரை அமர்வில் வழக்கு எண். W.P.(MD) No.32237 of 2025 தொடரப்பட்டு, அவ்வழக்கு தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மதுரை அமர்வு 13.11.2025 நாளிட்ட தீர்ப்பின் அடிப்படையில், மதுரை மாநகராட்சி தொடர் நடவடிக்கை எடுத்து வருவதாக, மதுரை மாநகராட்சி உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவி ஆணையாளரின் (வருவாய்) (பொறுப்பு) வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிவதால். மனுதாரர் மனு மீது மேல் நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்று இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. M.கிருஷ்ணபாண்டி,
த/பெ ஆர். முத்துமாயன்,
கதவு எண் 10, மேலப்பொன்னகரம் 12 வது தெரு,
மதுரை–625 016.

(2) ஆணையர்,
மதுரை மாநகராட்சி, மதுரை.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

(4) இணை இயக்குநர்/ ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032

செயலாளர்.
5/5/26